**BANK NEGARA MALAYSIA**
**CENTRAL BANK OF MALAYSIA**

# அறிவிப்பு

## பேங்க் நெகாரா மலேசியாவின் பெயர், நிறுவன சின்னம், உயர் அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவிகளைத் தவறாகப் பயன்படுத்துதல்

மக்களை ஏமாற்றும் நோக்கத்தில், சில தரப்பினர் பேங்க் நெகாரா மலேசியாவின் பெயர், நிறுவன சின்னம், உயர் அதிகாரிகளின் பெயர் மற்றும் பதவிகளை பயன்படுத்தி சட்டவிரோதமான திட்டங்கள் அல்லது மற்ற மோசடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இந்த சட்டவிரோத திட்டங்கள் அல்லது மோசடி நடவடிக்கைகளை மின்னஞ்சல், கடிதம், தொலைபேசி அழைப்புகள், குறுந்தகவல் சேவை (SMS) அல்லது பிற தகவல் தொடர்புகளின் மூலம் விளம்பரப் படுத்தப்படுகிறது.

**பின்வரும் நடவடிக்கைகள் மூலம் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்:**

(1) பேங்க் நெகாரா மலேசியா தரப்பினர் என்று கூறிக் கொண்டு சந்தேகத்துக்குரிய மோசடி முதலீட்டு திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளில் பங்கேற்க அழைக்கும் தொலைபேசி அழைப்பு, கடிதம், குறுநதகவல அலலது மின்னஞ்சல் ஆகியவற்றை **புறக்கணியுங்கள்.**

(2) **எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள்**– பேங்க் நெகாரா மலேசியா ஒருபோதும் முதலீட்டு திட்டத்தை ஊக்குவிக்க, உங்களின் தனிப்பட்ட நிதி விபரங்களை பெற அல்லது மூன்றம் தரப்பினருக்கு பண பரிமாற்றம் செய்ய உங்களைத் தொடர்புக் கொள்ளாது.

(3) உங்களிடமிருந்து பணம் அல்லது முதலீடு பெறுவதற்காக, பேங்க் நெகாரா மலேசியா அல்லது அதன் உயர் அதிகாரிகள் வெளியாக்கிய கடிதம் என்று கூறிக் கொண்டு உங்களிடம் தொடர்புக் கொள்ளும் நிறுவனங்கள் அல்லது தனி நபரிடம் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

சந்தேகம் இருப்பின், தொடர்புக் கொள்ளுங்கள் அல்லது புகார் செய்யுங்கள் :

**BNMTELELINK** (பயனீட்டாளர் தொடர்பு மையம்)

தொலைபேசி : **1-300-88-5465**
தொலைநகல் : **03-2174 1515**
மின் அஞ்சல் : **bnmtelelink@bnm.gov.my**

கேள்விகள் அல்லது புகார்களைத் குறுந்தகவல் வழி அனுப்பும் முறை:
**BNM TANYA** [**உங்கள் கேள்வி / புகார்**] டைப் செய்து **15888** என்ற எண்ணுக்கு அனுப்பவும்.

நிதி மோசடி பற்றிய மேல் விபரங்கள் பெற, பேங்க் நெகாரா மலேசியா இணையதளத்தின் **http://fraudalert.bnm.gov.my** என்ற அகப்பக்கத்தை வலம் வாருங்கள் அல்லது **http://facebook.com/bnm.official** எனும் முகநூலில் எங்களுடன் உரையாடலாம்.